# OOTY LAKE CONSERVATION - AWARENESS CAMPAIGN - METHODOLOGY




*A visual documentation for*

## OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN



*Submitted to*

**The District Collector**
**The Nilgiris**

*Participants*

- **DSSC, Wellington, Coonoor**
- **School Children, The Nilgiris**
- **Municipal Workers, UMC**





# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN

## Date: 07.09.2016



*A Visual Documentation*



*Programme Organised & Documented by*


**Coodu**

**Community Organisation for Oppressed and Depressed Upliftment**

**15-A, Kongu Nagar East, Ramanathapuram, Coimbatore - 45**

**Ph: 0422 – 2316178, Email: cooduindia@gmail.com/ coodu_cbe@yahoo.co.in web:www.coodu.org**

# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN















# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN














# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN















# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN


















# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN













# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN














# EVENTS ON NEWS

## New initiative

COIMBATORE
THE HINDU • THURSDAY, SEPTEMBER 8, 2016



Lt Gen S.K. Gadeock, Commandant, DSSC, Wellington, and Nilgiris Collector P. Sankar cleaning the Boat House in Udhagamandalam on Wednesday as part of the DSSC's efforts to keep Nilgiris clean and green. — PHOTO: M. SATHYAMOORTHY

## OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN

## EVENTS ON NEWS

கோயம்புத்தூர் ● வியாழன் ● செப்டம்பர் 8 2016

# அறைகூவல்!

● ஊட்டியை குப்பையில்லா நகரமாக மாற்ற...;

● சுகாதார பணியில் கைகோர்த்த ராணுவத்தினர்

ஊட்டி ● செப். 8–

நீலகிரியின் சுகாதாரத்தை காக்கும் பணியில் ராணுவத்தினர் கை கோர்த்துள்ளனர்; ஊட்டியை'குப்பையில்லா நகரமாக' மாற்ற, அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா நகரமான நீலகிரியில் இயற்கை சுரண்டல், வன அழிவு உட்பட பல காரணங்களால், பசுமை பாழாகி வருகிறது. இதனால், வன வளம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரத்தை காக்க தொடர்ந்து விழிப்புணர்வும், களப் பணிகளும் நடந்து வருகின்றன. இருப்பினும், முயற்சிக்கு இனி, நூறு சதவீத பலன் கிடைத்ததாக தெரியவில்லை.

**கை கோர்த்தது ராணுவம்**

அதன் தொடர்ச்சியாக, நீலகிரியில், 'தூய்மை பாரதம்' திட்டத்தின் கீழ், சுகாதாரம், பசுமையை காக்கும் பணியில் இணைந்து செயல்பட, நீலகிரி மாவட்ட நிர்வாகத்துடன், வெலிங்டன் ராணுவ பயிற்சிக் கல்லூரி கை கோர்த்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக, நேற்று சுகாதாரத்தை வலியுறுத்தி, ஊட்டி சாந்தி விஜய் பள்ளி மைதானத்தில் இருந்து, படகு இல்லம் வரை விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப் பட்டது.



ஊட்டி படகு இல்ல ஏரியை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்ட வெலிங்டன் ராணுவ மைய வீரர்கள்.

மாவட்ட கலெக்டர் சங்கர், ராணுவப் பயிற்சி கல்லூரி கமாண்டன்ட் ஜெனரல் கடியோக் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

**ஏரியில் களப்பணி**

இதில், பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர், தன்னார்வ தொண்டு அமைப்பினர் என, 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று, தூய்மையை வலியுறுத்தும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர். ஊர்வலம் ஊட்டி படகு இல்லம், மார்க்கெட், பஸ் நிலையம் வழியாக படகு இல்லம் வரை சென்றது. பின், ஊட்டி ஏரியில் குவிந்து கிடந்த குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகளை ராணுவ வீரர்கள் அகற்றி, தங்களின் பங்களிப்பை காண்பித்தனர்.

**அறைகூவல்**

பின், ராணுவப் பயிற்சிக் கல்லூரி தலைவர் கடியோக் கூறுகையில்,"நீலகிரியில், பிரதமரின் 'தூய்மை பாரத' திட்டத்தை செயல்படுத்த" மாவட்ட நிர்வாகத்துடன் ராணுவக் கல்லூரியும் இணைந்து செயல்படும். சில நாட்களுக்கு முன், 2,500 மரக்கன்றுகளை நட்டோம். நீலகிரி மாவட்டம், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக இருப்பதால், இங்குள்ள வணிக நிறுவனங்கள், தேயிலை தொழிற்சாலைகள் , பள்ளி கல்வி நிர்வாகங்கள், நீலகிரியை குப்பையில்லா நகரமாக மாற்ற முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். குறிப்பாக, ஊட்டியையும் தூய்மையான பகுதியாக மாற்ற அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்," என்றார்.

நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன், ஊட்டி நகராட்சி தலைவி சத்தியபாமா, மாவட்ட சுற்றுலா அலுவலர் (கூடுதல் பொறுப்பு) விஜயகுமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN

## EVENTS ON NEWS

தினத்தந்தி கோவை 8-9-2016 ★★




பேரணியில் கலந்து கொண்ட ராணுவ வீரர்களை படத்தில் காணலாம்.

ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி

### ராணுவ வீரர்கள் விழிப்புணர்வு பேரணி

ஊட்டி, செப்.8-

ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி வெலிங்டன் ராணுவ கல்லூரி மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஊட்டியில் நடைபெற்றது. பேரணியை வெலிங்டன் ராணுவ கல்லூரி கமாண்டன்ட் லெப்டினன்ட் ஜெனரல் காடியோக் தொடங்கி வைத்தார். பேரணிக்கு கலெக்டர் சங்கர் தலைமை தாங்கினார். இதில் ராணுவ வீரர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவிகள், துப்புரவு பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் ஊட்டி ஏ.டி.சி. அருகே உள்ள காந்தி மைதானத்தில் தொடங்கி மணிக்கூண்டு, லோயர் பஜார் வழியாக படகு இல்லத்தை அடைந்தது. அங்கு கலெக்டர் சங்கர் மற்றும் ராணுவ கல்லூரி கமாண்டன்ட் காடியோக் மற்றும் ராணுவ வீரர்கள், மாணவர்கள் ஏரியில் மிதந்த பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர்.

இதுகுறித்து கலெக்டர் சங்கர் கூறியதாவது:-

முதல்-அமைச்சர் உத்தரவுபடி கோடப்பமந்து மற்றும் ஊட்டி ஏரியை தூய்மைபடுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் கோடப்பமந்து கால்வாயில் குப்பைகளை கொட்டக்கூடாது. மேலும் ஏரியின் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# OOTY LAKE CONSERVATION AWARENESS RALLY & MASS CLEANING CAMPAIGN

## EVENTS ON NEWS

தினகரன் ● வியாழக்கிழமை ● 8.9.2016

# ஊட்டி ஏரியை சுத்தம் செய்த வெலிங்டன் ராணுவ வீரர்கள்



▶ ஊட்டி ஏரியை பாதுகாக்க வலியுறுத்தி பள்ளி மாணவர்கள் மற்றும் ராணுவத்தினர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடந்தது.

## நகரையும் சுத்தம் செய்ய முடிவு

**ஊட்டி,செப். 8:** சுற்றுலா நகரமான ஊட்டியை சுத்தம் செய்ய ராணுவத்தை பயன்படுத்தப்போவதாக என வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரி தலைவர் கடியோக் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது பொது சேவைகளில் ராணுவத்தை ஈடுபடுத்தும் முயற்சியில் வெலிங்டன் ராணுவ மையம் ஈடுபட்டுள்ளது. கடந்த வாரம் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் தும்மனட்டியில் 500 மரக்கன்றுநடப்பட்டது.இதில், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து மரக்கன்றுகளை ராணுவ வீரர்கள் நடவு செய்தனர்.

தொடர்ந்து, பல்வேறு சமூக சேவைகளிலும், ஊட்டி ஏரியை தூய்மைப்படுத்தும் பணியிலும் ராணுவ வீரர்களை ஈடுபடுத்தப்படவுள்ளதாக வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரி தலைவர் கடியோக் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்,தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் நேற்று தூய்மை விழிப்புணர்வு பேரணி ஊட்டியில் நடந்தது. இப்பேரணி சாந்தி விஜய் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் துவங்கி ஊட்டி படகு இல்லம் வரை சென்றது. பேரணியை கலெக்டர் சங்கர், ராணுவ பயிற்சிக் கல்லூரி தலைவர் கடியோக் ஆகியோர் துவக்கிவைத்தனர்.

பேரணியில் ராணுவ வீரர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, ஊட்டி ஏரியை சுத்தம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது. இதில், 50க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் படகில் சென்றவாறு ஊட்டி ஏரியில் இருந்த பிளாஸ்டிக் கழிவுகள் உட்பட குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றினர். மேலும், தேனிலவு படகு இல்லம் பகுதியிலும் தூய்மை பணியில் ஈடுபட்டனர்.

ராணுவ பயிற்சிக் கல்லூரி தலைவர் கடியோக் நிருபர்களிடம் கூறுகையில், நாட்டை பாதுகாப்பது மட்டுமின்றி, நாட்டை தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சியிலும் ராணுவ வீரர்கள் பங்கேற்க வேண்டும் என்ற நோக்கிலேயே ராணுவ வீரர்களைக் கொண்டு தற்போது பல்வேறு நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் தும்மனட்டியில் மரம் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்றோம். இன்று (நேற்று) ஊட்டி ஏரியை சுத்தம் செய்யும் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளோம். விரைவில் முதுமலை புலிகள் காப்பகம் செல்லும் வழித்தடங்கள், சாலைகள் மற்றும் காப்பகத்திற்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். அதுமட்டுமின்றி, சர்வதேச சுற்றுலா நகரமான ஊட்டியையும் சுத்தம் செய்ய திட்டமிட்டுள்ளோம். விரைவில் ஊட்டி நகரில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்கு முன்னதாக, பொதுமக்கள் மத்தியில் தூய்மை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும், என்றார்.

நான்கு மாதங்கள் இடைவெளியில் இரண்டாவது முறையாக இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி 9ம் தேதி வெலிங்டன் ராணுவ மையத்திற்கு வருகிறார். ஜனாதிபதியை வரவேற்க நீலகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மற்ற அரசுத்துறைகளுடன் இணைந்து வரவேற்பு மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

இங்கு வரும் ஜனாதிபதியிடம், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி குறித்து தெரிவிக்கப்படும். தற்போது பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் பல ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருவது குறித்தும் தெரிவிக்கப்படும்.